தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு
குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER

ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004



# சக்கர வியூகம்



டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதியதாக டிரஸ்ட்(அறக்கட்டளை), பவுண்டேஷன்(FOUNDATION), ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம்(ORGANISATION), ஆன்மீக அமைப்புகள்,அரசியல் கட்சி பதிவு செய்து தொடங்கிடவும் ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
BHAGAVAAN FOUNDATION
CELL: 99446 16559



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 200 | 13.1.2026 | TUESDAY | MARGAZHI : 29 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 200 | 13.1.2026 | செவ்வாய்கிழமை | மார்கழி : 29 | விலை : ரூ.5/–


## ஜெர்மனி பல்கலை.கள் இந்தியாவில் கல்வி வளாகங்களை நிறுவ

# "பிரதமர் மோடி அழைப்பு"



அகமதாபாத்: ஜன.13-

ஜெர்மனி பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் தங்களது வளாகங்களை நிறுவ வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.

ஜெர்மன் அதிபர் மெர்ஸுடன் இணைந்து இன்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் பேசிய பிரதமர் மோடி, "இன்று நாம் உருவாக்கியுள்ள உயர் கல்வி குறித்த விரிவான செயல் திட்டம், கல்வித் துறையில் நமது கூட்டாண்மைக்கு ஒரு புதிய திசையை வழங்கும். ஜெர்மனி பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் தங்களது வளாகங்களைத் திறக்க நான் அழைக்கிறேன். இந்தியக் குடிமக்களுக்கு விசா இல்லாத பயண வசதியை அறிவித்ததற்காக அதிபர் மெர்ஸுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உக்ரைன் மற்றும் காசா நிலைமை உட்பட உலகளாவிய மற்றும் பிராந்தியப் பிரச்சினைகள் குறித்து நாங்கள் இருவரும் விவாதம் நடத்தினோம். பயங்கரவாதம் மனிதகுலத்துக்கு ஒரு கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது என்ற கருத்தில் இரு நாடுகளும் ஒன்றுபட்டுள்ளன. அதை எதிர்த்துப் போராடுவதில் இரு நாடுகளும் உறுதியாக உள்ளன.

உலகளாவிய அனைத்து மோதல்கள் மற்றும் சர்ச்சைகளுக்கும் அமைதியான தீர்வை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பயங்கரவாதம் ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கும் ஒரு கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். இந்தியாவும் ஜெர்மனியும் அசைக்க முடியாத உறுதியுடன் இந்த அச்சுறுத்தலை ஒன்றாக எதிர்த்துப் போராடுவதில் உறுதியாக உள்ளன.

இன்று கையெழுத்திடப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், இந்த அனைத்துத் துறைகளிலும் நமது ஒத்துழைப்புக்கு புதிய உத்வேகத்தையும் வலிமையையும் வழங்கும். உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள உலகளாவிய நிறுவனங்களை சீர்திருத்துவது மிக முக்கியம் என்பதை இந்தியாவும் ஜெர்மனியும் ஒப்புக்கொள்கின்றன. ஐ.நா. பாதுகாப்பு சபையை சீர்திருத்துவதற்காக ஜி4 குழு மூலம் நாங்கள் மேற்கொள்ளும் கூட்டு முயற்சிகள் இந்த பொதுவான நம்பிக்கைக்கு ஒரு சான்றாகும்.

இந்தியாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையேயான தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆண்டுதோறும் வலுப்பெற்று வருகிறது. அதன் தாக்கம் இன்று களத்தில் தெளிவாகத் தெரிகிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் இந்தியாவும் ஜெர்மனியும் ஒரே மாதிரியான முன்னுரிமைகளைப் பகிர்ந்து கொள்கின்றன.

நமது பாதுகாப்புத் தொழில்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு செயல் திட்டத்திலும் நாங்கள் பணியாற்றுவோம், இது கூட்டு மேம்பாடு மற்றும் கூட்டு உற்பத்திக்கு புதிய வாய்ப்புகளைத் திறக்கும்" என்று அவர் கூறினார்.

ஜெர்மன் அதிபர் ஃபிரெட்ரிக் மெர்ஸ் தற்போது இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார். பதவியேற்ற பிறகு அவர் மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.



## புளியங்குடியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சமத்துவ பொங்கல் விழா

புளியங்குடி, ஜன.13

தமிழக வெற்றிக்கழக தலைவர் தளபதி மற்றும் பொதுச் செயலாளர் உத்தரவின் படி,

தென்காசி வடக்கு மாவட்டம் தமிழக வெற்றிக் கழகம் சார்பாக, தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் மாரியப்பன் முன்னிலையில், வடக்கு மாவட்ட தலைமை அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. இந்த விழாவில் மாவட்ட இணை செயலாளர் சூர்யா, துணைச் செயலாளர் மீனாட்சி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அமுதராணி, செயற்குழு உறுப்பினர்கள் நீலாதேவி, மல்லிகா, மாவட்ட இளைஞரணி செயலாளர் சுரேஷ், இணைச்செயலாளர் தினேஷ்பாபு முள்ளிக்குளம் சந்திரமோகன்,மற்றும் மாவட்ட, நகர,பேரூர், ஒன்றியம், கிளை கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் மனு நாள் தமிழ்நாடு சீருடை பணியாளர்களுக்கு புரதச்சத்து உணவுத் தொகுப்பு வழங்கல்



தென்காசி, ஜன.13-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (12.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் இரண்டாம் நிலை காவலர், சிறைக்காவலர், தீயணைப்பு அலுவலர் பதவிகளுக்கான எழுத்துத்தேர்விற்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் இலவச பயிற்சி பெற்று தேர்வான 24 பணியாளர்களுக்கு உடற்தகுதித் தேர்வில் சிறப்புடன் எதிர்கொள்ளும் பொருட்டு புரதச்சத்துக்கள் அடங்கிய உணவுப்பொருட்கள் தொகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) நம்பிராயர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் முத்துராமலிங்கம் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அலங்காநல்லூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஆலோசனை கூட்டம்



அலங்காநல்லூர், ஜன.13-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கேட்டு கடை தனியார் திருமண மண்டபத்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஆலோசனைக் கூட்டம் மற்றும் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மாவட்ட செயலாளர் தமிழாளன் தலைமையில்

நடைபெற்றது. இதில் தீர்மானங்கள் தலைவர் தொல் திருமாவளவன் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கட்சியை வலுவான கட்டமைப்பில் ஏற்படுத்தி, மாநில கட்சி அந்தஸ்திற்கு கொண்டுவர அயராது பாடுபட்டிருக்கிறார். அவருக்கு முதலில் நன்றி தெரிவித்தனர்.

அதனை தொடர்ந்து கிளை முகாம் தோறும் சென்று நிறை குறைகளை கேட்டு கட்சி கொடி ஏற்றுவது மற்றும் கிராமங்கள்தோறும் சென்று ஆலோசனை கூட்டம் மற்றும் தெருமுனை பிரச்சாரங்கள் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொடர்ந்து பேசிய மாவட்ட செயலாளர் தமிழாளன் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக விடுதலை சிறுத்தைகள் கட்சியில் பயணித்து வருகின்றேன். சிறுவயது முதல் தலைவரின் ஈர்ப்பால் இந்த இயக்கத்தில் இணைந்தேன். எனது திருமணத்தை தலைவர் திருமாவளவன் எனது இல்லத்திற்கு வருகை தந்து தலைமையேற்றி நடத்தி வைத்து சிறப்பித்தார். எனது உயிர் உள்ளவரை கட்சிக்காக பணியாற்றுவேன்.

சோழவந்தான் தொகுதியை பொறுத்தவரை விசிக வலுவான கட்டமைப்பில் உள்ளது. நடந்து முடிந்த தேர்தலாக இருந்தாலும், நடைபெற உள்ள தேர்தலாக இருந்தாலும் விசிக அதில் ஒரு அங்கம் வகிக்கும். அனைவரையும் ஒன்று சேர்த்து செயல்படுவோம் என்று தெரிவித்தார். இதில் மாவட்ட அமைப்பாளர் அதிவீரபாண்டியன், முன்னாள் மண்டலச் செயலாளர் கலைவாணன், முன்னாள் மாவட்ட செயலாளர்செல்வராஜ், ஒன்றிய செயலாளர் பாலமுருகன், தமிழ்நிலவன்,மற்றும் நிர்வாகிகள் அன்பழகன், அருள்மொழியான், ராஜராம், கடல்கேசன், மகளிரணி தன்மானச்செல்வி, உள்பட ஏராளமான கலந்துகொண்டனர்.

## தமிழக ஊராட்சி தூய்மை காவலர்கள், பம்ப் ஆப்ரேட்டர்கள் ஊதிய உயர்வு : அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி



சின்னாளபட்டி, ஜன.13

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் தொழிலாளர் சங்கம் சார்பாக இந்திய கம்யூனிஸ்ட் மாநில பொருளாளர் எம்.ஆறுகம் தலைமையில் ஏ.ஐ.டியு.சி மாநில பொதுச் செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன், சி.பி.ஐ. திண்டுக்கல் மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன். தமிழக ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர் சங்க மாநில தலைவர் எம்.இராமாநிதி, மாநில பொதுச்செயலாளர் பி.கிருஷ்ணசாமி, திண்டுக்கல் மாவட்ட நிர்வாகிகள் அன்னக்கொடி, செல்வக்கொடி, தோழர் ஈடித், நாகஜோதி, கோவை மாவட்ட கௌரவத் தலைவர் சக்திவேல், சிலம்பரசன் ஆகியோர் திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தனர். கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் விரைவில் தமிழக ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கும், பம்பு ஆப்ரேட்டர்களுக்கும் ஊதிய உயர்வு என்ற நல்ல செய்தியை திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் அறிவிப்பார் என்றார்.

நிகழ்ச்சியின்போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், கிழக்கு மாவட்ட திமுக துணைச்செயலாளர் ஆ.நாகராஜன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலர் வடிவேல் முருகன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்யேகன், சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், 7வது வார்டு திமுக நிர்வாகிகள் நரசிங்கம், வீரபாண்டி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## கம்பம் சட்டமன்ற தொகுதி விசிக மாவட்ட செயலாளர் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம்



தேனி, ஜன.13

தேனி மாவட்டம் 4 சட்டமன்றங்களை உள்ளடக்கியது. கம்பம் சட்டமன்றத் தொகுதி மாவட்ட செயலாளர் மற்றும் மாவட்ட நிர்வாகம் புதிய பொறுப்பாளர்கள் அறிமுக கூட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அயூப்கான் தலைமையில் மாவட்ட பொருளாளர் ஆரோக்யசாமி மாவட்ட செய்தி தொடர்பாளர் பெர்க்மான்ஸ் மாவட்ட துணைச் செயலாளர்கள் முருகேசன் அண்ணாதுரை தேவாரம் செல்வம், கவிதா மற்றும் நிர்வாக குழு உறுப்பினர் பச்சையப்பன், கம்பம்மோகன் ஆகிய மாவட்ட நிர்வாகத்தினரை தேனி திண்டுக்கல் மேனாள் மண்டல செயலாளர் தமிழ்வாணன் மற்றும் தேனி மண்டல செயலாளர் அரிமா.ஜே.ரபீக்,

போடி _ கம்பம் மண்டல துணைச் செயலாளர் சோ.சுருளி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு கம்பம் சட்டமன்ற தொகுதியின் மாவட்ட செயலாளர் மற்றும் மாவட்ட நிர்வாகத்தினரை அறிமுகம் செய்து வைத்து எழுச்சித் தமிழர் அறிவித்த மாவட்ட பொறுப்பாளர்களுடன் கைகோர்த்து களப்பணியாற்றி கம்பம் சட்டமன்ற தொகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை பலப்படுத்த வேண்டும் என ஆலோசனைகள் வழங்கினர்.

இந்நிகழ்வில் சுமார் 300க்கும் மேற்பட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில, மாவட்ட, நகர், ஒன்றிய, பேரூர், முகாம் பொறுப்பாளர்கள் ஆண்கள் பெண்கள் என ஏராளமான கலந்து கொண்டனர்.....

# பருப்பு உற்பத்தியில் தற்சார்புத் திட்டம்: வெற்றி பெறுமா?



இந்தியா, ஜன.13-

பருப்பு வகைப் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்குக் கடைசியாக ஒரு நல்ல செய்தி வந்துள்ளது. 2025 அக்டோபர் 1 அன்று, மத்திய அமைச்சரவை 'பயறு உற்பத்தியில் தற்சார்பு இயக்கம்' (Mission for Aatmanirbharta in Pulses) என்கிற புதிய திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ.11,440 கோடி முதலீட்டில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. தற்போது சுமார் 250 லட்சம் டன்களாக இருக்கும் நாட்டின் பருப்பு உற்பத்தியை, இந்த இயக்கம் 350 லட்சம் டன்களாக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளது. ஊட்டச்சத்துப் பாதுகாப்புக்கும் மண் ஆரோக்கியத்துக்கும் பருப்புப் பயிர்கள் சாகுபடி முக்கியமானது என்கிறபோதிலும், குறைந்த லாபம், குறைவான கொள்முதல் ஆதரவு காரணமாக இப்பயிர்கள் விவசாயிகளுக்குக் கவர்ச்சியற்றதாகவே இருக்கின்றன. இந்தப் புதிய உற்பத்தி இயக்கத்தால் இந்தியாவின் பருப்பு உற்பத்தியை உயர்த்த முடியுமா?

புறக்கணிக்கப்பட்ட பயிர்கள்: இந்தியாவில் பருப்பு வகை பயிரிடுதல் நீண்ட காலமாகப் பல வகைகளில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. 1960களின் நடுப்பகுதியில் அதிக மகசூல் தரும் கோதுமை, நெல் வகைகளின் அறிமுகம், இந்தியாவில் பயிர்ச் சாகுபடி முறையின் அடிப்படையையே மாற்றியது. பசுமைப் புரட்சித் தொழில்நுட்பங்கள் பெரும்பாலும் நீர்ப்பாசனப் பகுதிகளுக்கும் தானியப் பயிர்களுக்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதால், பருப்பு வகைகள் மானாவாரிப் பகுதிகளிலும், மோசமான உள்கட்டமைப்பு வசதி கொண்ட இடங்களிலுமே தொடர்ந்தன. இதன் விளைவாக, 196061இல் 820 லட்சம் டன்களாக இருந்த உணவு தானிய உற்பத்தி, 202425இல் 3,530 லட்சம் டன்களாக (நான்கு மடங்குக்கும் மேலாக) அதிகரித்தது. ஆனால், இதே காலக்கட்டத்தில் பருப்பு உற்பத்தி வெறும் 120 லட்சம் டன்னிலிருந்து 250 லட்சம் டன்னாக மட்டுமே அதிகரித்துள்ளது. பருப்பு உற்பத்தியில் ஏற்பட்ட இந்த மெதுவான வளர்ச்சி, உற்பத்திக்கும் உள்நாட்டுத் தேவைக்கும் இடையிலான இடைவெளியை அதிகரித்தது. இதைக் குறைக்க இறக்குமதியையே இந்தியா தொடர்ந்து நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

# கூட்டணி ஆட்சியை நாங்கள் வலியுறுத்தவில்லை நயினார் நாகேந்திரன்



மதுரை, ஜன.13-

கூட்டணி ஆட்சியை பாஜக வலியுறுத்தவில்லை என்று தெரிவித்துள்ள பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், வரும் 23ம் தேதி பிரதமர் மோடி பங்கேற்கும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் மதுரையில் நடந்தால் அவர் திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்கு வருகை தர வாய்ப்பு இருப்பதாகக் கூறியுள்ளார். பிரதமர் மோடி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்க கூடிய தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான முதல் பொதுக்கூட்டம் வருகின்ற 23ம் தேதி தமிழகத்தில் நடைபெற உள்ளது. பொதுக்கூட்டத்துக்கான இடத்தை தேர்வு செய்வதற்கான பணியில் மாநில தேசிய ஜனநாயகக் கூட்டணி ஈடுபட்டுள்ளது. இதற்காக மதுரை பாண்டி கோவில் அருகே உள்ள அம்மா திடலை ஆய்வு செய்வதற்காக பாஜக மற்றும் அதிமுகவைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் மதுரை வந்திருந்தனர். பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் அதிமுக எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார், முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு, அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜன் செல்லப்பா, பெரிய புள்ளான், பாஜக மூத்த தலைவர்கள் ஹெச்.ராஜா, பொன். ராதாகிருஷ்ணன், கேசவ விநாயகம் உள்ளிட்டோர் அம்மா திடலை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். பின்னர் நயினார் நாகேந்திரன் கூறுகையில், ''பிரதமர் மோடி வருகை அன்று தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினர் பங்கேற்கும் மாபெரும் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பிரதமர் மோடி பங்கேற்க உள்ள பொதுக் கூட்டம் சென்னை, திருச்சி, மதுரை ஆகியவற்றில் எதாவது ஒரு இடத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. எந்த மாவட்டத்தில் நடத்துவது என்பது இன்னும் உறுதியாகவில்லை.

மதுரையில் நடைபெறுவதாக இருந்தால், பாண்டி கோவில் அம்மா திடலில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல், மதுரையில் பொதுக்கூட்டம் நடைபெறுமானால், பிரதமர் மோடி திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்கு வருகை தர வாய்ப்பு இருக்கிறது. கூட்டணியில் யார் யார் இடம்பெறுவார்கள் என்பது குறித்து எடப்பாடி பழனிசாமி, பியூஷ் கோயல், அமித் ஷா ஆகியோர் முடிவு செய்வார்கள்.

விஜய்க்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் என பாஜகவுக்கு எந்த அவசியமும் இல்லை. பழைய பராசக்தி படத்திற்கும் கூட சென்சார் போர்டு பல தடைகள் கொடுத்திருக்கிறது. கூட்டணி ஆட்சி வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தலாம். அவர்கள் செய்வதையெல்லாம் நாங்களும் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. திமுக அகற்றப்பட வேண்டும் என்பது மட்டுமே எங்களது நோக்கம். கூட்டணி ஆட்சி வேண்டும் என நாங்கள் சொல்லவில்லை. 56 தொகுதிகள் மற்றும் 3 அமைச்சர்கள் வேண்டும் என்று பாஜக கேட்பதாக வெளியாகி உள்ள தகவல் வதந்தி'' என்று தெரிவித்தார்.



# தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் இருந்து மகாத்மா காந்தி பெயர் நீக்கத்தை கண்டித்து பிரதமர் மோடி வீட்டை முற்றுகையிடுவோம்

சென்னை, ஜன.13-

தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் மகாத்மா காந்தியின் பெயரை நீக்கியதை கண்டித்து, தமிழகத்திலிருந்து 10 ஆயிரம் பேரை திரட்டி பிரதமர் மோடியின் வீட்டை முற்றுகையிடுவோம் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தை பாதுகாக்கக் கோரியும், இத்திட்டத்தின் பெயரை மாற்றி, மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிய மத்திய பாஜக அரசைக் கண்டித்தும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. இதற்கு தலைமை தாங்கி செல்வப்பெருந்தகை பேசியதாவது: பாஜகவின் சித்தாந்தமே மகாத்மா காந்தியின் பெயரை இந்திய தேசத்திலிருந்து அகற்ற வேண்டும் என்பதுதான். ஆனால் ஓராயிரம் மோடி வந்தாலும் காந்தியின் பெயரை இந்தியாவின் மக்கள் மனதில் இருந்து அகற்றவே முடியாது. கரோனா காலகட்டத்தில் ஏழை எளிய மக்களுக்கான வரப்பிரசாதமாக அமைந்த திட்டம்தான் மகாத்மா காந்தி நூறு நாள் வேலைத் திட்டமாகும். ஆனால் மத்திய மோடி அரசாங்கம் இந்தத் திட்டத்தை அகற்றி வருகிறது. பாஜக அரசின் மக்கள் விரோத செயல்களை கண்டித்து பல்வேறு போராட்டங்களை முடித்த பிறகு, இறுதியாக பிரதமர் மோடி வீட்டை முற்றுகையிடும் போராட்டம் நடத்த இருக்கிறோம். அதில் தமிழகத்தில் இருந்து 10 ஆயிரம் பேர் பங்கேற்பார்கள். இவ்வாறு செல்வப்பெருந்தகை பேசினார்.

இந்தப் போராட்டத்தில் சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜேஷ் குமார், முன்னாள் மாநில தலைவர் கே.வி.தங்கபாலு, முன்னாள் எம்.பி. செல்லக்குமார், எம்எல்ஏ துரை சந்திரசேகர், பொருளாளர் ரூபி மனோகரன், நடிகர் மன்சூர் அலிகான், கட்சியின் மாநில துணை தலைவர்கள் ஆ.கோபண்ணா, மாநில மகிளா காங்கிரஸ் தலைவர் ஹசீனா சையத், மாவட்ட தலைவர்கள் முத்தழகன், சிவ.ராஜசேகரன், எம்.எஸ்.திரவியம் உள்ளிட்டோர் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

# எம்ஜிஆர் பிறந்தநாள்: ஜன. 18, 19 தேதிகளில் தமிழகம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் அதிமுக அறிவிப்பு

சென்னை, ஜன.13-

அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109 வது பிறந்த நாளை முன்னிட்டு வரும் 18, 19 ஆகிய தேதிகளில் பொதுக்கூட்டங்கள் நடைபெற இருப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு வரும் 18, 19 ஆகிய தேதிகளில் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளன. கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் 82 மாவட்டங்களிலும்; கழக அமைப்புகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் புதுச்சேரி, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளன. கழக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், தாங்கள் சார்ந்த மாவட்டத்தில் நடைபெற உள்ள பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ள இடங்கள்; அவற்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவோர் விபரங்கள் அடங்கிய பட்டியலை அதிமுக வெளியிட்டுள்ளது. அதன்படி, வரும் 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று தென் சென்னையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி உரையாற்ற உள்ளார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் கே.பி. முனுசாமியும், திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் திண்டுக்கல் சீனிவாசனும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் மு. தம்பிதுரையும், கோவை புறநகர் தெற்கு மாவட்டத்தில் எஸ்.பி. வேலுமணியும் உரையாற்ற உள்ளனர். இதேபோல், வரும் 19ம் தேதி திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் நத்தம் விஸ்வநாதனும், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் சி. பொன்னையனும், நாமக்கல் மாவட்டத்தில் பி. தங்கமணியும், திருப்பூர் மாநகர் மாவட்டத்தில் பொள்ளாச்சி ஜெயராமனும், வட சென்னை கிழக்கு மாவட்டத்தில் டி. ஜெயக்குமாரும், விழுப்புரம் மாவட்டத்தில் சி.வி. சண்முகமும் உரையாற்ற உள்ளனர்.






# தென்காசியில் சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் துவக்கி வைப்பு

தென்காசி, ஜன.13-

தென்காசி மாவட்டம் புதிய பேருந்து நிலைய பகுதியில் (12.01.2026) மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., தமிழ்நாடு போக்குவரத்துத்துறை

சார்பில் சாலை பாதுகாப்பு மாத விழாவினை முன்னிட்டு, நடைபெற்ற சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு விழிப்புணர்வு விழாவினை துவக்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில்,

தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு போக்குவரத்துத்துறை சார்பில் சாலை பாதுகாப்பு மாத விழா (01.01.2026 முதல் 31.01.2026 வரை) முன்னிட்டு சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு தொடர்பாக இருசக்கர வாகனத்தின் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பேரணி நடைபெற்றது. இப்பேரணி புதிய பேருந்து நிலையத்திலிருந்து துவங்கி சக்திநகர், குத்துக்கல்வலசை வழியாக வட்டார போக்குவரத்து அலுவலகம் வரை சென்றடைந்தது. இப்பேரணியில், தலைக்கவசம் உயிர்க்கவசம், மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டாதீர் போன்ற வாசகங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. பொதுமக்கள் போக்குவரத்துத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சாலை விதிகளை பின்பற்றி உயிரை காத்திடும் வகையில் பாதுகாப்பான பயணத்தினை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் சரவணபவன் (தென்காசி), செல்வி (சங்கரன்கோவில்), ஆய்வாளர்கள் ராஜசேகரன், ராஜன், கனகவல்லி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கடலூர் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு: சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்



சென்னை, ஜன.13-

கடலூர் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடகிழக்கு இலங்கை கடலோரப் பகுதிகளில் முல்லைத்தீவுக்கு அருகில் நேற்று முன்தினம் மாலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக கரையைக் கடந்தது.

இது படிப்படியாக வலு குறைந்து, தென் கடலோர தமிழகம் மற்றும் அதையொட்டிய மன்னார் வளைகுடா பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாக நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று சில இடங்களிலும், நாளை தென் தமிழகத்தில் சில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், வரும் 14ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 15 முதல் 17ம் தேதி வரை தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும் வறண்ட வானிலையும் நிலவக்கூடும்.

தமிழகத்தில் இன்று கடலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதியிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் சூறாவளிக்காற்று வீசக் கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணியில் 9 செ.மீ., திருப்பூண்டியில் 6 செ.மீ., வேதாரண்யம், திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 5 செ.மீ., நாலுமுக்கு, காக்காச்சி, தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி, புதுக்கோட்டை மாவட்டம் நாகுடி, நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரை,

தலைஞாயிறு ஆகிய இடங்களில் 4 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆம்னி பேருந்து கட்டணங்களை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் அன்புமணி வலியுறுத்தல்



சென்னை, ஜன.13-

பொதுமக்கள் எளிதாக சொந்த ஊர் சென்று திரும்புவதற்கு வசதியாக ஆம்னி பேருந்துகளின் கட்டணங்களைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதற்காக லட்சக் கணக்கான மக்கள் சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு செல்லத் திட்டமிட்டிருக்கும் நிலையில், இதைப் பயன்படுத்திக் கொண்டு தனியார் ஆம்னி பேருந்து நிறுவனங்கள் விண்ணை முட்டும் அளவுக்கு கட்டணத்தை உயர்த்தியுள்ளன. அரசின் விதிகளை மீறி அப்பட்டமாக கட்டணக் கொள்ளை நடைபெறும் நிலையில், அதைத் தடுக்க திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது. சென்னையில் இருந்து நாளை 13ம் தேதியும், நாளை மறுநாள் 14ம் தேதியும் மதுரை செல்வதற்கு ரூ.4,000 வரையிலும், நெல்லை செல்ல ரூ.4,500 வரையிலும், கோவைக்கு ரூ.3,800 வரையிலும் கட்டணமாக வசூலிக்கப்படும் என்று ஆம்னி பேருந்துகள் அறிவித்துள்ளன. இந்தக் கட்டண விவரங்கள் ஆன்லைன் முன்பதிவு இணைய தளங்களில் வெளியிடப்பட்டு முன்பதிவுகள் செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து ஊடகங்களிலும் இந்தக் கட்டணக் கொள்ளை தொடர்பாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனாலும் ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை தடுக்காமல் திமுக அரசு வேடிக்கைப் பார்த்து வருகிறது. ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் பல முறை ஆணையிட்டிருக்கிறது. ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை பாமக ஒவ்வொரு முறையும் அம்பலப்படுத்தி வருகிறது. அப்போதெல்லாம் ஆம்னி பேருந்துகளின் உரிமையாளர்களிடம் பேச்சு நடத்தி ரூ.100 அல்லது ரூ.200 கட்டணக் குறைப்பு செய்ய வைப்பது, அதையும் மீறி கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு ரூ.2,000 அபராதம் விதிப்பது போன்ற ஏமாற்று வேலைகளை மட்டுமே திமுக அரசு செய்து வருகிறது.ஒரு மக்கள் நல அரசின் கடமை மக்களின் பக்கம் நிற்பது தான். திமுக அரசு மக்களின் பக்கம் நிற்கிறது என்றால், சட்டவிரோதமாக கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் ஆம்னி பேருந்து நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றின் கட்டணங்களைக் குறைக்கச் செய்திருக்க வேண்டும். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் ஒருமுறை கூட திமுக அரசு அவ்வாறு செய்யவில்லை. மாறாக கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் ஆம்னி பேருந்து நிறுவனங்களின் பக்கம் நின்று அவை மக்களை சுரண்டுவதற்கு துணை போவதையே திமுக அரசு வாடிக்கையாக வைத்திருக்கிறது. தமிழ்நாட்டை ஆளும் திமுக அரசு மக்களுக்கு சேவை செய்வதை விடுத்து, தனியார் முதலாளிகளுக்கு ஏவல் செய்வதையே கடமையாக வைத்திருக்கிறது என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது. ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை திமுக அரசு தடுக்கத் தவறியதன் மூலம் மீண்டும் ஒருமுறை அந்தக் குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. திமுக ஆட்சியாளர்களுக்கு மனசாட்சி இருந்தால் பொதுமக்கள் எளிதாக சொந்த ஊர் சென்று திரும்புவதற்கு வசதியாக ஆம்னி பேருந்துகளின் கட்டணங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று வலியுறுத்தியுள்ளார்.

# கனிமவள கடத்தல் விவகாரம்: அண்ணாமலை, அன்புமணி தமிழக அரசுக்கு கண்டனம்



சென்னை, ஜன.13-
கனிம வளக் கடத்தலுக்கு திமுக அமைச்சர்கள் உடந்தையாக இருப்பதாக பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை, பாமக தலைவர் அன்புமணி ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர். இதுதெடர்பாக அண்ணாமலை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தென்காசி மாவட்டத்தில் இருந்து கேரளாவுக்குத் தங்கு தடையின்றி நடைபெறும் சட்டவிரோதக் கனிமவளக் கடத்தலைக் கட்டுப்படுத்த ஆளும் திமுக அரசு தவறிவிட்டது. இந்தக் கனிமவளக் கடத்தல் தொடர்பாகப் பலமுறை முதல்வர் மு.க.ஸ்டாலின் கவனத்துக்குக் கொண்டு சென்றும், இந்த விவகாரத்தில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தக் கடத்தலுக்கு முன்னாள் மற்றும் தற்போதைய அமைச்சர்களே ஆதரவாக இருக்கின்றனர். இதன்படி தினமும் ஆயிரக்கணக்கான லாரிகளில் தமிழகத்தில் இருந்து கனிமங்கள் கடத்தப்படுகின்றன. இதனால் இயற்கை வளங்கள் அழிவதுடன், அப்பகுதி மக்களும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு அவர் கூறியுள்ளார். பாமக தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தென்காசி மாவட்டம் கடையம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெறும் கனிமவளக் கொள்ளையை தடுக்க முடியவில்லை. இந்த விவகாரத்தில் திமுக நெல்லை மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கடையம் சந்திரசேகர் ராஜினாமா செய்துள்ளார். அவர் எடுத்துள்ள முடிவு சரியானது. தென் மாவட்டங்களில் பல்லாயிரம் கோடி அளவுக்கு கனிம கொள்ளை நடைபெறுகிறது. இதில் திமுகவுக்குப் பங்கு இருப்பதாக நான் தொடர்ந்து புகார் தெரிவித்து வருகிறேன். அவை உண்மை என்று தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. இனியாவது கனிமக் கொள்ளையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அன்புமணி தெரிவித்துள்ளார்.

# டெல்லிக்கு தெரிந்தே தான் 'பங்கு' கேட்கிறதா காங்கிரஸ்?



சென்னை, ஜன.13-
திமுகவுக்கும் அதிமுகவுக்கும் இது முக்கியமான தேர்தல். ஆனால், பாஜகவுக்கும் காங்கிரஸுக்கும் இந்தத் தேர்தல் 2029 மக்களவைத் தேர்தலுக்கான அடித்தளம். அதனால் தான் இரண்டு கட்சிகளுமே இந்தத் தேர்தலில் தங்களுக்கான வாக்கு வங்கியை உயர்த்திக் காட்ட, அதிக தொகுதிகளும் அதிகாரத்தில் பங்கும் கேட்டு கூட்டணிக் கட்சிகளை உலுக்கி எடுத்து வருகின்றன. இதில், அதிமுகவை பாஜக எந்த விதத்திலெல்லாம் தங்களின் வழிக்குக் கொண்டுவரப் பார்க்கிறது என்பது தெரிந்த கதைதான். அதே வழியில் காங்கிரஸும் இப்போது திமுகவுக்கு குடைச்சல் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. ஒரே ஒரு வித்தியாசம்... பாஜக அதிகாரத்தை வைத்து அதட்டிப் பார்க்கிறது; காங்கிரஸ் விஜய்யை வைத்து மிரட்டிப் பார்க்கிறது. கடந்த சில வருடங்களாகவே, 'அதிகாரத்தில் பங்கு' எனும் குரல் தமிழக காங்கிரஸுக்குள் சன்னமாக ஒலிக்க ஆரம்பித்து விட்டது. விஜய் அரசியலுக்கு வந்ததும் அது சத்தமாகவே கேட்க ஆரம்பித்து விட்டது. காங்கிரஸில் எம்எல்ஏ சீட்டை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்கள் எல்லாம் சற்று அடக்கி வாசிக்கிறார்கள். திமுக தயவில் எம்.பி.யாகி இருக்கும் சிலர், "காங்கிரஸ் வளர்ச்சிடைய வேண்டுமானால் அதிகாரத்தில் பங்கு கேட்க வேண்டும்" என்று ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இவர்களில் சிலர், இந்த விஷயத்தை பிடிவாதமாகப் பேசுவதற்கு கடந்த மக்களவைத் தேர்தலில் திமுகவினருடன் அவர்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் ஒரு முக்கியக் காரணம்.

ஆட்சியில் பங்கு கேட்கும் எம்.பி.க்களுக்கு, இந்தத் தேர்தலில் காங்கிரஸ் எந்த நிலைக்குப் போனாலும் கவலையில்லை. ஆனால், அவர்கள் களமிறங்கப் போகும் 2029 தேர்தலில் காங்கிரஸ் வலுவாக இருக்க வேண்டும்; தாங்கள் கேட்டதைக் கொடுக்கும் வலுவான கூட்டணியில் இருக்க வேண்டும் என்பது தான் அவர்களின் கவலை. அதற்காகத்தான். போதும் திமுக; போய்ப் பார்க்கலாம் விஜய்யிடம் என இவர்கள் போர்க்கொடி தூக்குகிறார்கள். பிரவீன் சக்கரவர்த்தி விஜய்யை சந்தித்துப் பேசியபோதே டெல்லி காங்கிரஸ் தலைமை உரிய நடவடிக்கை எடுத்து முற்றுப்புள்ளி வைத்திருந்தால் இவ்வளவு தூரம் இந்த விவகாரம் வளர்ந்திருக்காது. வழக்கம் போல் இதையும் டெல்லி வேடிக்கை பார்த்ததால் ஆட்சியில் பங்கு கோரிக்கை வலுத்துள்ளது. ஆட்சியில் பங்கு கேட்பவர்களுக்கு, 'ஜனநாயகனுக்கு' ஏற்படுத்தப்பட்ட சென்சார் சிக்கல் நல்வாய்ப்பாக அமைந்து போனது. அதை வைத்துக் கொண்டு மத்திய பாஜக அரசைக் கண்டிக்கும் சாக்கில் விஜய்க்கு ஆதரவுக் கரம் நீட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ வலைதளமே இதை பிரதானப்படுத்தி பேசி இருக்கிறது. ஆனால், கலைஞனின் படைப்புச் சுதந்திரத்தைப் பறிப்பதாக 'ஜனநாயகனுக்கு' நியாயம் கேட்கும் காங்கிரஸ், இதே சிக்கலைச் சந்தித்த உதயநிதி தரப்பினரின் 'பராசக்தி' பற்றி பேச மறுத்தது ஏன் என்ற கேள்வியும் எழுகிறது.

இதுகுறித்து காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சிலரிடம் பேசினோம். "ஆதரித்தாலும் எதிர்த்தாலும் உறுதியாக இருக்கும் கட்சி தான் திமுக. அந்தக் கட்சி வைத்திருக்கும் எம்.பி.க்களின் எண்ணிக்கை தான் காங்கிரஸுக்கு இப்போது எக்ஸ்ட்ரா பலம். அதனால், மாநிலத்தில் திமுகவுக்கு பக்க துணையாக இருக்கிறது காங்கிரஸ். அதேசமயம் காலத்துக்கேற்ப தன்னை திமுக மாற்றிக் கொள்ள வேண்டும். அனைத்துக் கட்சிகளுமே அதிகாரத்தில் பங்கு என்ற பேச்சை எடுக்கும் போது திமுகவும் அதற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். ஆட்சியில் பங்கு குறித்து மாணிக்கம் தாகூர், பிரவீன் சக்கரவர்த்தி உள்ளிட்டோர் அழுத்தமாக பேசுவது அவர்களின் குரலாக மட்டும் தெரியவில்லை. டெல்லி தலைமைக்கு நெருக்கமாக இருக்கும் இவர்கள், டெல்லியின் எண்ணவோட்டம் தெரிந்தே இப்படிப் பேசுகிறார்கள்" என்கிறார்கள் அவர்கள்.

# கரூர் நெரிசல் வழக்கு: டெல்லி சிபிஐ அலுவலகத்தில் விஜய் ஆஜர்!



புதுடெல்லி, ஜன.13-
கரூரில் தவெக பிரச்சாரக் கூட்டத்தின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த வழக்கில் டெல்லி சிபிஐ அலுவலகத்தில் தவெக தலைவர் விஜய் இன்று நேரில் ஆஜரானார். கடந்த ஆண்டு செப்.27ம் தேதி கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் தவெக தலைவர் விஜய் கலந்து கொண்ட பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 110க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதுதொடர்பாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் சிபிஐ விசாரித்து வருகிறது. பல்வேறு தரப்பினரிடமும் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். தவெக நிர்வாகிகளிடம் நவ.24. 25ம் தேதிகளில் விசாரணை நடைபெற்றது. சிபிஐ விசாரணையை மேற்பார்வையிட உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி அஜய் ரஸ்தோகி, கூடுதல் டிஜிபிக்கள் சோனல் மிஸ்ரா, சுமித்சரண் ஆகியோர் டிச.2, 3ம் தேதிகளில் கரூர் வந்து விசாரணை குறித்து ஆய்வு செய்தனர். மேலும், கரூர் மாவட்ட ஆட்சியர் தங்கவேல், ä.T.ஜோஷி நிர்மல்குமார், எஸ்.பி. ஜோஷ் தங்கையாவிடமும் விசாரணை நடத்தப்பட்டது. இந்நிலையில், டெல்லியில் உள்ள தலைமை அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு தவெக தலைவர் விஜய்க்கு சிபிஐ கடந்த ஜன.6ம் தேதி சம்மன் அனுப்பியது. அதன்படி, இன்று காலை சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் டெல்லி சென்றடைந்த விஜய், சிபிஐ தலைமை அலுவலகத்தில் அதிகாரிகள் முன்பு ஆஜரானார். அவருடன் கட்சியின் முக்கிய நிர்வாகிகளும் டெல்லிக்குச் சென்றுள்ளனர். இந்த விசாரணை 3 நாட்கள் நீடிக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. விஜய்யிடம் கேட்பதற்காக 50க்கும் மேற்பட்ட முக்கியமான கேள்விகளை சிபிஐ அதிகாரிகள் தயார் செய்துள்ளனர். விசாரணை முடிந்த பிறகு, சிபிஐ தனது இறுதிக் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யும் என்று தெரிகிறது. இதற்கிடையே, விசாரணைக்கு ஆஜராவது தொடர்பாக விஜய் சென்னையில் உள்ள தனது இல்லத்தில் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், சட்ட வல்லுநர்களுடன் நேற்று தீவிர ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது.

முன்னதாக இந்த வழக்கு தொடர்பாக, கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சிடிஆர். நிர்மல்குமார் உள்ளிட்ட நிர்வாகிகளிடம் ஏற்கெனவே சுமார் 20 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# தேனி, தே.சிந்தலைச்சேரி இயேசுவின் திரு இருதய ஆலயம் அர்ச்சிப்பு விழா மதுரை பேராயர் திறந்து வைப்பு

தேனி, ஜன.13-
தேனி, தே.சிந்தலைச்சேரியில் புதிதாக கட்டப்பட்ட இத்தாலி ரோம் ஆலய வடிவமைப்புகளை கொண்ட 126 அடி உயர இயேசுவின் திரு இருதய ஆலயம் அர்ச்சிப்பு விழா, மதுரை மறை மாவாட்ட பேராயர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.பேராயர் அவர்களுக்கு மேளதாளம் முழங்க டிராக்டரில் வைத்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கூடி ஊர்வலமாக ஆலயத்திற்கு அழைத்து வந்தனர். இதனை தொடர்ந்து பெண்கள் ஆலத்தி எடுத்தும் பூரண கும்பம் மரியாதை செலுத்தியும், இயேசுவின் திரு பாடலுடன் கும்பம் மரியாதை பாடல்கள் பாடி உற்ச்சாகமாக வரவேற்றனர். பின்னர் ஆலயத்தில் உள்ள கல்வெட்டை திறந்து வைத்து, இயேசுவின் இருதய ஆண்டவர் ஆலயத்தில் புனித நீர் தெளிக்கப்பட்டது.

திருப்பள்ளியைய மதுரை மண்டல பேராயர் அந்தோணிசாமி சவரிமுத்து சிறப்பு திருப்பலி மக்களுக்கு போதித்தார் அதனைத் தொடர்ந்து புனித நீர் தெளிக்கப்பட்டு கூடியிருந்த ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களுக்கு தீர்த்தம் வழங்கப்பட்டு, ஆசீர்வாதம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து சிறப்பு திருப்பலிக்கு பின்னர் அன்னதானமும் வழங்கப்பட்டது .

# கமலின் பெயர், புகைப்படங்களை வர்த்தக ரீதியில் பயன்படுத்த இடைக்கால தடை

சென்னை, ஜன.13-
நடிகர் கமல்ஹாசனின் பெயர், புகைப்படங்களை வர்த்தக ரீதியில் பயன்படுத்த இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த 'நீயே விடை' என்ற பெயருடைய நிறுவனம், தனது புகைப்படம், பெயர், உலக நாயகன் என்ற படத்தையும், தனது பிரபல வசனத்தையும் தனது அனுமதியின்றி பயன்படுத்தி, டிஷர்ட்களையும், சர்ட்களையும் விற்பனை செய்து வருவதாகக் கூறி, நடிகர் கமல்ஹாசன் சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன் விசாரணைக்கு வந்த போது, "தனி உரிமையை பாதுகாக்கும் வகையில், நீயே விடை நிறுவனம் மட்டுமல்லாமல், வேறு எந்த நிறுவனங்களும், தனது பெயர், புகைப்படம், பட்டங்களையும், வசனங்களையும் தனது அனுமதியின்றி பயன்படுத்தத் தடை விதிக்க வேண்டும் என நடிகர் கமல்ஹாசன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சதீஷ் பராசரன் மற்றும் வழக்கறிஞர் விஜயன் சுப்பிரமணியன் ஆகியோர் வாதிட்டனர்.இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, அனுமதின்றி, வர்த்தக ரீதியில் நடிகர் கமலின் பெயர், புகைப் படங்களை பயன்படுத்த இடைக்கால தடை விதித்தும் மனுவுக்கு பதிலளிக்கும்படி, "நீயே விடை" நிறுவனத்துக்கு உத்தரவிட்டும் விசாரணையை பிப்ரவரி மாதத்துக்கு தள்ளிவைத்தார். அதே சமயம், கார்ட்டூன்களில் நடிகர் கமல் படத்தை பயன்படுத்த எந்த தடையும் இல்லை என்பதை விளக்கிய நீதிபதி, வேறு எவரும் அனுமதின்றி தனது புகைப்படம், பெயரை பயன்படுத்தக் கூடாது என்று நீதிமன்றத்தில் கிடைத்த உத்தரவு குறித்து தமிழ், ஆங்கில பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிட கமல் தரப்புக்கு உத்தரவிட்டுள்ளார்.

# சென்னை அரசு மருத்துவமனையில் ரவுடியை வெட்டி கொன்ற கும்பல் டிடிவி தினகரன் கடும் கண்டனம்



சென்னை, ஜன.13-
சட்டம் ஒழுங்கில் நிலவும் சீர்கேடுகளைக் களையத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என காவல்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன் என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மனைவியைப் பார்க்க வந்த ரவுடி ஒருவர், மருத்துவமனைக்குள்ளாகவே அடையாளம் தெரியாத கும்பலால் சரமாரியாக வெட்டிக் கொலை செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. தமிழகத்தின் தலைநகர் சென்னையில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான நோயாளிகளும், பொதுமக்களும் வந்து செல்லும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்குள்ளாகவே நடைபெற்றிருக்கும் இக்கொடூரச் சம்பவம் அங்கு வரும் நோயாளிகளுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த மக்களின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. தமிழகத்தில் அடிக்கடி அரங்கேறும் கொலை, கொள்ளை, பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் உள்ளிட்ட சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய காவல்துறை, அலட்சியப் போக்குடன் செயல்படுவதே, தற்போது அரசு மருத்துவமனைக்குள் புகுந்து ஒருவரை வெட்டி படுகொலை செய்யும் அளவிற்கான அசாதாரண சூழலைத் தமிழகத்தில் உருவாக்கியுள்ளது. எனவே, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்குள் புகுந்து படுகொலை செய்த கும்பலைக் கண்டறிந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, மாநிலம் முழுவதும் பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்தி, அடியோடு சீர்குலைந்திருக்கும் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளைக் களையத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என காவல்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்" என்று தினகரன் கூறியுள்ளார்

# ஆட்சி அதிகாரத்தில் பங்கு கிடையாது: முதல்வர் கருத்தை வெளிப்படுத்தினார் ஐ.பெரியசாமி



சென்னை, ஜன.13-
தமிழகத்தில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் சிலர் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில், கூட்டணி ஆட்சி இல்லை, அதிகாரத்தில் பங்கு கிடையாது என்று திமுக துணை பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி தெரிவித்துள்ளார். கூட்டணி ஆட்சி கிடையாது என்பதில் முதல்வர் ஸ்டாலின் உறுதியாக இருக்கிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

திமுக கூட்டணியில் இருக்கும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர், வரும் சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பிறகு அமைய இருக்கும் புதிய ஆட்சியில் பங்கு வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர். சட்டசபை காங்கிரஸ் குழு தலைவர் ராஜேஷ்குமார், கட்சியின் முன்னாள் மாநில தலைவர் கே.எஸ். அழகிரி, எம்.பி.க்கள் மாணிக்கம் தாகூர், சுதா போன்றோர் ஆட்சியில் பங்கு கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றனர். ராகுல் காந்திக்கு நெருக்கமானவரான காங்கிரஸ் நிபுணர்கள் மற்றும் தரவு பகுப்பாய்வு குழுவின் தலைவர் பிரவீன் சக்கரவர்த்தியும் ஆட்சியில் பங்கு வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கோரி வருகிறார். இது திமுக கூட்டணியில் புகைச்சலை ஏற்படுத்தி வருகிறது. அதிலும், எம்.பி. மாணிக்கம் தாகூர் திமுகவை மேலும் மேலும் கோபப்படுத்தும் வகையில், ஆகாஷ் பாஸ்கரன் தயாரித்து ரெட் ஜெயன்ட் மூவீஸ் நிறுவனம் விநியோகம் செய்து இந்தி எதிர்ப்பு போராட்டத்தை மையப்படுத்தி வெளியாகி உள்ள பராசக்தி படத்தை கடுமையாக விமர்சித்துள்ளார். அவர் தனது எக்ஸ் தளப் பதிவில் 'பராசக்தி படத்தை தோல்விப் படம் என்று நண்பர்கள் சொன்னார்கள். நாம் ஏன் உழைச்ச காசை வீணாக்கணும் என்று நான் இந்தப் படத்தை பார்க்கவில்லை' என்று நேற்று பதிவு போட்டிருந்தார். இதற்காக, சமூக வலைதளங்களில் மாணிக்கம் தாகூரை திமுகவினர் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். இதற்கிடையே, ஜனநாயகன் படம் சென்சார் பிரச்சினையில் சிக்கியுள்ள நிலையில், விஜய்க்கு ஆதரவாகவும் மத்திய அரசை எதிர்த்தும் காங்கிரஸ் குரல் கொடுத்தது. தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை திமுகவுக்கு நெருக்கமானவர் என்று கருதப்பட்ட போதிலும், தமிழக காங்கிரஸ் கமிட்டி சார்பில் ஜனநாயகன் படத்துக்கு ஆதரவாக அறிக்கை வெளியிடப்பட்டது. இதனால் தவெகவுடன் கூட்டணிக்கு அச்சாரமா? என்றும் பரபரப்பு எழுந்தது.

இந்நிலையில், இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டும் வகையில் ஆட்சியில் பங்கு கிடையாது என்று திமுக அறிவித்துள்ளது. திமுக துணை பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி இதைத் தெரிவித்துள்ளார். மேலும், கூட்டணி ஆட்சி கிடையாது என்பதில் முதல்வர் ஸ்டாலின் உறுதியாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் முதல்வரின் எண்ணத்தை ஐ.பெரியசாமி வெளிப்படுத்தி இருப்பதோடு, ஆட்சியில் பங்கு கிடையாது என்ற உறுதியான செய்தியை காங்கிரஸுக்கு திமுக தலைமை அறிவித்துள்ளதாகவும் கருதப்படுகிறது. திண்டுக்கல் மாநகராட்சி மேட்டுப்பட்டி பகுதியில் சமத்துவப் பொங்கல் விழா நேற்று நடைபெற்றது. அனைத்து மதத்தினரும் கலந்துகொண்டனர். இதில் பங்கேற்ற அமைச்சர் ஐ.பெரியசாமி செய்தியாளர்களிடம் கூறுகையில், ''ஆட்சியில் பங்கு கேட்பது கூட்டணிக் கட்சிகளின் உரிமை. ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பது எப்போதும் கிடையாது. தனிப்பட்ட கட்சியின் ஆட்சிதான் இருந்திருக்கிறது. இனியும் கூட்டணி ஆட்சி இருக்காது. கூட்டணி ஆட்சி இல்லை என்பதில் தமிழக முதல்வர் உறுதியாக இருக்கிறார். ஆட்சியில் பங்கு வேண்டும் என்று காங்கிரஸ் கோருவது அவர்களின் விருப்பம். மத்திய திரைப்படத் தணிக்கை வாரியம் குறித்து முதல்வர் வைத்துள்ள குற்றச்சாட்டு உண்மைதான்' என்றார். மகளிருக்கு தித்திப்பான செய்தி: முன்னதாக, அமைச்சர் சமத்துவப் பொங்கல் விழாவை தொடங்கி வைத்து பேசுகையில், 'பொங்கல் கொண்டாடும் நேரத்தில் மகளிருக்கான தித்திப்பான செய்தி வரும் என தெரிவித்துக் கொள்கிறேன். அதை முதல்வர்தான் அறிவிப்பார். எல்லோருக்கும் எல்லா திட்டங்களையும் கொண்டு சேர்ப்பதில் இந்த அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது' என்றார்.



## தேசிய அளவில் துப்பாக்கிச்சூடும் போட்டி சேரன்பள்ளி மாணவி எம்.ஹரிஷா வெள்ளிப்பதக்கம் பள்ளி முதல்வர் என்.திலகம் பாராட்டு

சின்னாளபட்டி, ஜன 13-

மத்திய பிரதேசம் மாநிலம் போபாலில் ஜனவரி 5 முதல் 9ம் தேதி வரை 5 நாட்கள் நடைபெற்ற தேசிய அளவிலான துப்பாக்கி சுடும் போட்டியில் தமிழக அணியின் சார்பாக விளையாடுவதற்கான வீராங்கனைகள் மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானம் அருகே உள்ள துப்பாக்கிச் சுடும் பயிற்சி மையம் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். இதில் சேரன் பள்ளி மாணவி ஹரிஷா சிறப்பாக விளையாடி தேசிய அளவில் வெள்ளிப் பதக்கம் பெற்றார். மாணவி ஹரிஷாவிற்கான பாராட்டு நிகழ்ச்சியில் சேரன் கல்வி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலரும். பள்ளி தாளாளரும். மாநில ஹேண்ட்பால் கழக செயலாளருமான எம்.சிவக்குமார் மற்றும் பள்ளி முதல்வரும், சேரன் கல்வி அறக்கட்டளை அறங்காவலரும் என்.திலகம் மற்றும் அறங்காவலர்களான பி.பாரதிராஜா, ஜெ.ஆல்பிரட் எங், எஸ்.அசோக் மற்றும் ஹேண்ட்பால் பயிற்றுனர்களும், உடற்கல்வி ஆசிரியர்களுமான என்.அசோக்குமார், டி.செந்தில்குமார், சி.ஆரோக்கிய ரஞ்சனி, மற்றும் பள்ளி அலுவலக பணியாளர்கள் மகேஸ்வரி, பிரியா, பள்ளி ஆசிரியைகள் கலந்து கொண்ட மாணவி எம்.ஹரிஷாவைப் பாராட்டி வாழ்த்தினார்கள். திண்டுக்கல் மாவட்டத்தில் தேசிய அளவில் துப்பாக்கி சுடும் போட்டியில் சேரன் வித்யா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி எம்.ஹரிஷா வெள்ளி பதக்கம் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது. இது குறித்து பள்ளி முதல்வர் என்.திலகம் கூறுகையில் எங்கள் பள்ளி மாணவி ஹரிஷா தேசிய அளவிலான துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கேற்று வெள்ளிப் பதக்கம் பெற்று எங்கள் பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளார். மாணவி ஹரிஷாவைப் பாராட்டி பரிசுகள் வழங்கினார்.

## மாநில அளவிலான ஹேண்ட்பால் போட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி மாணவர்கள் முதல் பரிசு

சின்னாளபட்டி ஜன 13-

திண்டுக்கல் மாவட்டம் சின்னாபட்டி சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஹேண்ட்பால் போட்டிகளில் மாநில மற்றும் தேசிய அளவில் சாதனை படைத்த பள்ளியாகும். விவேகானந்தர் பிறந்தநாளை தேசிய இளைஞர் தினமாக கொண்டாடும் பொருட்டு கோவை இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்லூரியில் (மாருதி உடற்கல்வி கல்லூரி) ஹேண்ட்பால் போட்டிகள் நடைபெற்றது. இதில் 19 வயதுக்குட்பட்ட



மாணவர்களுக்கான சூப்பர் சீனியர் பிரிவில் சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் முதல் பரிசையும் பதக்கம் மற்றும் சான்றிதழையும் பெற்றனர். சேரன் கல்வி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலரும். பள்ளி தாளாளருமான எம்.சிவக்குமார் மற்றும் பள்ளி முதல்வரும் என்.திலகம் மற்றும் அறங்காவலர்களான பி.பாரதிராஜா, ஜெ.ஆல்பிரட்எங், எஸ்.அசோக் மற்றும் ஹேண்ட்பால் பயிற்றுனர்களும், உடற்கல்வி ஆசிரியர்களுமான என்.அசோக்குமார், டி.செந்தில்குமார், சி.ஆரோக்கிய ரஞ்சனி, மற்றும் பள்ளி அலுவலக பணியாளர்கள் மகேஸ்வரி, பிரியா, பள்ளி ஆசிரியைகள் வெற்றிபெற்ற விளையாட்டு வீரர்களை பாராட்டி வாழ்த்தினார்கள். பள்ளி மாணவர்கள் முதல் பரிசை பெற்றிருப்பது பள்ளி ஆசிரியர்களையும், மாணவர்களையும், பெற்றோர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.



## தமிழக வெற்றிக் கழகம் சார்பில்
## ஜல்லிக்கட்டுக்கு இரண்டு புல்லட் பரிசு

அலங்காநல்லூர். ஜன.13-

மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதிக்கு உட்பட்ட அரியூர் ஊராட்சி கீழநடுங்குளம் கிராமத்தில், தமிழக வெற்றிக் கழகம் மற்றும் கொற்கை ஒருங்கிணைந்த விவசாய பண்ணை குழு தலைவர் ஜோயல்சாம்ஆசீர் தலைமையில், ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் அவர் கூறியது : நான் கடந்த 20 ஆண்டுகளாக அரசு ஆசிரியராக பணியாற்றி வந்தேன். தமிழக வெற்றிக் கழகம் தொடங்கப்பட்டவுடன், எனது அரசு பதவியை ராஜினாமா செய்து விட்டேன். ஒரு இலக்குடன் கட்சியில் இணைந்து விட்டேன். வரும் 2026 இல் தலைவர் தளபதி விஜய் முதலமைச்சர் ஆக்குவது தான் எங்களின் லட்சியம்.தளபதி விஜய் கூறியது போல், வீட்டுக்கு ஒரு வாகனம் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார். அதனை நடைமுறைப்படுத்தும் விதமாக நடைபெற உள்ள அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு ஜல்லிக்கட்டில் சிறந்த தலா ஒரு மாடுபிடி வீரருக்கு புல்லட் மற்றும் மாட்டின் உரிமையாளருக்கு ரூபாய் 50,000 ரொக்கமும் வழங்க உள்ளோம். என்று தெரிவித்தார் அதனை தொடர்ந்து கட்சி நிர்வாகிகளுடன் புல்லட் பைக்கை அறிமுகம் செய்து வைத்தார்.




## வள்ளியூர் பத்திரிகையாளர்கள் சங்க சமத்துவ பொங்கல் விழாவில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்

வள்ளியூர்.ஜன.13-

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் உள்ள திசையன்விளை இராதாபுரம் நான்குனேரி வட்டார பத்திரிகையாளர்கள் சங்க கூட்ட அரங்கத்தில் வைத்து பதினாறாம் ஆண்டு சமத்துவ பொங்கல் விழா நடந்தது. சிறப்பு விருந்தினர்களாக திருநெல்வேலி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வி.பிரசன்னகுமார், வள்ளியூர் காவல்துறை துணை கண்காணிப்பாளர் கே.வெங்கடேஷ், நான்குநேரி துணைகண்காணிப்பாளர் தர்ஷிகா நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். பத்திரிக்கையாளர்கள் சங்க உறுப்பினர் எஸ்.பிரின்ஸ் பேரின்பராஜ் வரவேற்றுப் பேசினார் .சங்கத் தலைவர் எம்.அறிவரசு சங்கத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் பற்றி பேசினார். சங்கச் செயலாளர் இரா. சேவியர் காவல்துறை பத்திரிகையாளர்கள் நல்லுறவு பற்றி பேசினார். சிறப்பு விருந்தினர்களுக்கு சங்க உறுப்பினர்கள் பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கினர். சிறப்பு விருந்தினர்களுக்கு சங்கத் தலைவர் அறிவரசு "மீண்டும் தலைப்புச் செய்திகள்" என்ற புத்தகம் வழங்கினார். சங்க உறுப்பினர்கள் பொதுமக்கள் நலன் சார்ந்த பிரச்சனைகள் பற்றி காவல்துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தினர். முன்னதாக சங்க அலுவலகத்தில் பொங்கலிட்டு பூஜை நடத்தப்பட்டது .இதில் காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். சங்க உறுப்பினர் ஆறுமுகநயினார் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சி முடிவில் சங்க பொருளாளர் டேவிட் பிரபாகர் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை திசையன்விளை இராதாபுரம் நாங்குனேரி வட்டார பத்திரிகையாளர்கள் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் செய்திருந்தனர்.




## மதுரை மாவட்டத்தில் முதல் முறையாக சீன தற்காப்பு கலையான 'வூசு' பயிற்சி முகாம்

மதுரை.ஜன .13-

தமிழ்நாடு வூசு சங்கமும், மதுரை மாவட்ட வூசு சங்கமும் இணைந்து, மதுரை மாவட்டத்தில் முதல்முறையாக சீன தற்காப்பு கலையான 'வூசு' பயிற்சி முகாம் பாண்டிகோவில், ராஜமஹாலில் நடைபெற்றது. இதில் 6 வயது முதல் 12 வயதிற்குட்பட 75 மாணவ மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். தமிழ்நாடு வூசு சங்கத்தின் டவுளு பிரிவின் சிறப்பு பயிற்சியாளர் திண்டுக்கல்லில் இருந்த ஜாக்கி சங்கர் மாணவ மாணவிகளுக்கு பயிற்சியளித்து, சான்றிதழ்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்.மதுரை மாவட்டத்தின் வூசு சங்கத்தின் தலைவர் பழனிச்சாமி வரவேற்புரையாற்றினார், செயலாளர் முத்துக்குமார் நன்றியுரையாறறினார், அதில் தமிழ்நாடு சங்கத்தின் செயலாளர் ஜான்சன், நன்றியினை தெரிவித்தார். சங்கத்தின் பொருளாளர் பாலசுப்பிரமணி, சங்கம் உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.



## திருப்பூர் திமுக மாணவரணி சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் மருத்துவ முகாம்

திருப்பூர் ஜன 13-

மத்திய மாவட்ட திமுக மாணவர் அணி சார்பாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளைஞர் அணி கழக பொதுச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின்

பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு மாபெரும் இலவச ரத்ததான முகாம் மற்றும் கண் சிகிச்சை முகாம் பொது மருத்துவ முகாம் விஜயாபுரம் அரசு சமுதாய கூடத்தில் நடைபெற்றது. இந்த முகாமினை சட்டமன்ற உறுப்பினர் க செல்வராஜ் எம்எல்ஏ அவர்கள் துவக்கிவைத்தார். இந்த நிகழ்வில் மாநகர செயலாளர் டி கே டி மு நாகராஜ். எல்.ஜி மருத்துவமனை கோபாலகிருஷ்ணன். டாக்டர் திருப்திகா டாக்டர் அஸ்வின் பிரசன்னா.

நல்லூர் பகுதி செயலாளர் மேங்கோ பழனிச்சாமி, திமுக கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் இந்த மருத்துவ முகாமில் பெருந்திரளாக பங்கேற்றனர்.



## சமூகரெங்கபுரம் அரசுப்பள்ளியில் குழந்தை திருமணம் குறித்து விழிப்புணர்வு சிறப்புரையாற்றிய நீதிபதி

திசையன்விளை. ஜன.13-

நெல்லை மாவட்டம் ராதாபுரம் தாலுகா சட்ட பணிகள் குழுவின் சார்பாக ராதாபுரம் அருகேயுள்ள சமூகரெங்கபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் குழந்தை திருமணம், சுற்றுச்சூழல் மாசு கட்டுப்பாடு குறித்து விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முதலில் பள்ளி வளாகத்தில் மரக்கன்று ஒன்றை ராதாபுரம் குற்றவியல் நடுவர் நீதிபதி குபேரசுந்தர் நட்டார். இதனை தொடர்ந்து ராதாபுரம் வழக்கறிஞர்கள் சங்க தலைவர் இசக்கியப்பன் சுற்றுசூழல் மாசு கட்டுப்பாட்டில் மாணாக்கர்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்து கூறினார். பின்பு பேசிய தாலுகா சட்டப்பணிகள் குழுவின் தலைவர் நீதிபதி குபேரசுந்தர் குழந்தை திருணம் குறித்து சட்டம் என்ன சொல்கிறது என்பதை மாணாக்கர்களிடம் கேள்வி, பதில் மூலம் எடுத்துரைத்தார். சரியான பதில் கூறிய மாணவ மாணவிகளை நீதிபதி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர்.



## திசையன்விளை மிட்டாதார்குளத்தில் திமுக சார்பில் திராவிட பொங்கல் கிரிக்கெட் போட்டி சபாநாயகர் அப்பாவு தொடங்கி வைத்தார்

திசையன்விளை. ஜன.13-

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம் இராதாபுரம் மேற்கு ஒன்றிய திமுக சார்பில், திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு, மாபெரும் கிரிக்கெட் போட்டி திசையன்விளை அருகே உள்ள மிட்டார்தார்குளத்தில் நடைபெற்றது. பத்துக்கும் மேற்பட்ட அணிகள் கலந்து கொண்டே போட்டியினை, தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கலந்து கொண்டு துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட பஞ்சாயத்து தலைவரும் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளருமான வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், இராதாபுரம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் மி.ஜோசப் பெல்சி, ஒன்றிய குழு உறுப்பினர்கள், மாவட்ட மகளிர் அணி தலைவர் க.பரிமளம், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ.இசக்கி பாபு, ஊராட்சி மன்ற தலைவர்கள் கஸ்தூரி, ரங்கபுரம், பாலன், நவ்வலடி சரவணகுமார், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணியினுடைய துணை அமைப்பாளர் வேணுகோபால் , மாவட்ட திமுக பிரதிநிதி ஆறுமுகம் என்ற வேலப்பன், கோட்டை கருங்குளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் .சொக்கலிங்கம், மிட்டார்தார்குளம் கிளை கழக செயலாளர் செல்வன், கோட்டைக்கருங்குளம் அண்ணாதுரை, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் மகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பங்குச் சந்தை முதலீட்டாளர் எண்ணிக்கை 3 மடங்கு உயர்வு
### செபி தலைவர் பாண்டே தகவல்

சென்னை, ஜன.13-

இந்திய தேசியப் பங்குச் சந்தை உறுப்பினர்கள் சங்கத்தின் (ANMI) 15வது சர்வதேச மூலதனச் சந்தை மாநாடு 2026 சென்னையில் நடைபெற்றது.

இதில் இந்திய பங்குச் சந்தை பரிவர்த்தனை வாரியத்தின் (செபி) தலைவர் துஹின் காந்த பாண்டே பேசியதாவது: "இந்தியாவின் மூல தனச் சந்தைகள், பங்குச் சந்தை, டெரிவேட்டிவ்ஸ், பரஸ்பர நிதிகள், ரியல் எஸ்டேட் முதலீட்டு அறக்கட்டளைகள் (ஆர்இஐடி), உள்கட்டமைப்பு முதலீட்டு அறக்கட்டளைகள் மற்றும் கார்ப்பரேட் பத்திரங்கள் என அனைத்துத் துறைகளிலும் பெரும் எழுச்சி கண்டு வருகிறது.குறிப்பாக, இந்திய பங்குச் சந்தையில் முதலீடு செய்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த 2020ல் 4.3 கோடியாக இருந்த முதலீட்டாளர் எண்ணிக்கை இப்போது 3 மடங்கு அதிகரித்து 13.7 கோடியாகி உள்ளது.இதுபோலநடப்பு நிதியாண்டின்முதல்9 மாதங்களில் 311நிறுவனங்கள்புதியபங்குகளை வெளியிட்டு (ஐபிஓ) ரூ.1.7 லட்சம் கோடி திரட்டி உள்ளன.இவ்வாறு துஹின் காந்த பாண்டே கூறினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000